Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 292

வியாழக்கிழமை 14 செப்ரெம்பர் 2023

ஆவணி 28 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## வல்லிபுர ஆழ்வாருக்கு இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், செப்.14
வரலாற்றுச் சிறப்புமிக்க வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்தத் திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்ப »12



### கொக்குத்தொடுவாயில்

# தொடர்ந்து மீட்கப்படும் மனித எலும்புக்கூடுகள்

- நேற்றும் தொடர்ந்தது அகழ்வுப் பணி
- எலும்புக்கூடுகள், சயனைட் குப்பி, இலக்கத் தகடுகள் மீட்பு

முல்லைத்தீவு, செப்ரெம்பர் 14

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் ஏழாம் நாள் அகழ்வுகள் நேற்று நடைபெற்ற நிலையில், 3 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டன. இதுவரை நடந்த அகழ்வுகளில் 9 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. »11

## வாள்வெட்டு சந்தேகநபர் கைது!

யாழ்ப்பாணம், செப்.14
மயிலங்காட்டில் நடந்த வாள்வெட்டுச்சம்பவம்தொடர்பில் சாவகச்சேரியைச் சேர்ந்த ஒருவர் கைது »12



## எரிபொருள் விலையில் நாள்தோறும் மாற்றம்!

எரிசக்தி அமைச்சர் தகவல்

கொழும்பு, செப்.14
எரிபொருள்களின் விலைகளை நாளாந்தம் திருத்தம் செய்யும் முறைமையை அடுத்த »11

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்; வர்த்தமானி சில தினங்களில்

*வெளிவிவகார அமைச்சர் தகவல்*

கொழும்பு, செப்.14
தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில், சர்வதேச அளவுகோல்களின்படி தயாரிக்கப்பட்ட »11



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்தத் தேர்த் திருவிழா இலட்சக்கணக்கான பக்தர்கள் சூழ நடைபெற்றது. நல்லைக்கந்தன் தேரில் ஆரோகணித்து அருட்காட்சியளித்தார்.

## வரைவின் பிரதியை கோரும் ஆணைக்குழு

கொழும்பு, செப்.14
அமைச்சரவையால் அண்மையில் அங்கீகரிக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரை »12



## கோத்தாவுக்கு எதிர்ப்பு

கொழும்பு, செப்.14
முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மீண்டும் அரசியலில் பிரவேசிக்கவுள்ளார் என்றும், அவர் »12

### யாழ்.போதனா மருத்துவமனையில்

## அகற்றப்பட்ட சிறுமியின் கையை கொழும்பில் ஆய்வு செய்ய உத்தரவு

27ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப்.14
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் காய்ச்சலுக்காக சேர்க்கப்பட்ட சிறுமி ஒருவரின் கை மணிக்கட்டுக்கு கீழ் அகற்றப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று »11

## யாழ். சிறையில் இருந்த கைதி திடீர்ச் சாவு!

*மரணத்தில் சந்தேகம்?*

யாழ்ப்பாணம், செப்.14
யாழ்ப்பாணம், சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த ஒருவர் சிகிச் »12

### தனியார் விடுதியில் சடலமாக மீட்கப்பட்ட

## எனது பேர்த்திக்கு ஊசியேற்றி நானே கொலை செய்தேன்!

பாட்டி பரபரப்பு வாக்குமூலம்

விரிவுகள்:- பக் - 04 இல்

## பணிகளை புறக்கணித்தால் பணிநீக்க கடிதம் வீட்டுக்கு!

ரயில் சாரதிகளுக்கு அரசு எச்சரிக்கை »11



noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் மாவட்டத்தில்

# போதை மையமாக மாறும் துன்னாலை

யாழ்ப்பாணம், செப். 14

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதைப்பொருள் மையமாக துன்னாலை மாறிவருகின்றது என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.**

துன்னாலையில் உயிர்கொல்லிப் போதைப்பொருளான ஐஸ் போதையின் தாக்கம் அதிகரித்துள்ளது. இளைஞர்களின் கைகளுக்கு மிக இலகுவாகக் கிடைக்கும் போதைப் பொருளாக ஐஸ் மாற்றம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் பல தரப்பினருக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸாருக்கு இது தொடர்பான அனைத்து விடயங்களும் தெரியும். எனினும் பொலிஸார் இந்த விடயத்தில் மௌனமாக இருக்கின்றனர் என்று கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் தொடர்பில் பொலிஸாரிடமும், மாவட்டச் செயலகத்திடமும், மருத்துவமனையிலும் வெவ்வேறு தரவுகள் பேணப்படுகின்றன. இந்தத் தரவுகளை வெவ்வேறு தளங்களில் அல்லாமல் ஒரே தளத்தில் பேணவேண்டும். அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை, போதைப்பொருளுக்கு அடிமையான பலர் தாமாக விரும்பி மறுவாழ்வுக்கு வருகின்றனர் என்று தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபையின் வடமாகாண இணைப்பாளர் சியாமினி தியாகுலன் தெரிவித்தார். (ம-125)

# 104 கிராம அலுவலர்களுக்கு யாழில் பதவி வெற்றிடங்கள்!

யாழ்ப்பாணம், செப். 14

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 104 கிராம அலுவலர்களுக்கான பதவி வெற்றிடம் காணப்படுகின்றது என்று யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் பிரதீபன் தெரிவித்தார்.

15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் கிராம அலுவலர் வெற்றிடம் காணப்படுகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-125)

## திணைக்களங்களின் வசமுள்ள

# தனியார் காணிகளை விடுக்க பச்சைக்கொடி

வடக்கு - கிழக்கு உள்ளிட்ட 8 மாவட்டங்களில் வனவள பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள தனியார் காணிகளை விடுவிப்பது தொடர்பில் மக்களுடன் கலந்துரையாடிய பின்னர் திணைக்களங்களின் இணக்கப்பாட்டுடன் விடுவிக்கப்படும் என்று ஜனாதிபதி செயலகத்தின் வடக்குக்கான மேலதிக செயலர் இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் விசேட குழுக்கூட்டம் நேற்று புதன்கிழமை இடம்பெற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் இதுவரை வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் வனஜீவராசிகள் திணைக்களம் 72 ஆயிரத்து 407 ஏக்கர் நிலப்பரப்பையும், வனவளப் பாதுகாப்புத் திணைக்களம் 5807.74 ஏக்கர் நிலப்பரப்பையும் தமக்குக் கீழ் கொண்டுள்ளன.

வடக்கு - கிழக்கு உள்ளிட்ட 8 மாவட்டங்களில் இவ்வாறு அடையாளப்படுத்தப்பட்டதில் தனியார் காணிகள் அடையாளம் காணப்பட்டு அளவீடு செய்து விடுவிக்க ஜனாதிபதி தீர்மானம் எடுத்துள்ளார். மக்களுடன் கலந்துரையாடி பின்னர் திணைக்களங்களின் இணக்கப்பாட்டுடன் விடுவிக்கப்படவுள்ளது. இங்கு பிரச்சினை தீர்த்துக் கொள்ளமுடியாதபோது தேசிய மட்டக் குழுவுக்கு இது எடுத்துச் செல்லப்பட்டு முடிவு எட்டப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கையகப்படுத்தப்பட்ட காணிகளில் 11269.34 ஏக்கர் தனியார் காணியை முறையாக அளவீடு செய்து விடுவிக்குமாறு வன ஜீவராசி திணைக்களத்திடம் கோரப்பட்டிருந்தது.

எனினும் இதுவரை குறித்த திணைக்களத்தினால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட செயலகங்களுக்கு எவ்வித பதிலும் வழங்கப்படவில்லை.

அதேநேரம் யாழ்.மாவட்டத்தில் வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தினரால் கையகப்படுத்தப்பட்ட காணிகளில் 4196.04 ஏக்கர் நிலப்பரப்பு தனியார் காணியாகும். இணக்கப்பாட்டின் மூலம் அவையும் விடுவிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டினார். (ச-125)

# பருத்தித்தீவு மக்களின் 4 ஏக்கர் திணைக்களத்திடம்

## ஊர்காவற்றுறை பிரதேச செயலர் தகவல்

யாழ்ப்பாணம், செப். 14

ஊர்காவற்றுறை பருத்தித்தீவில் 6 குடும்பங்களுக்கான 4 ஏக்கர் காணி இன்னமும் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது என்று ஊர்காவற்துறை பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற யாழ். மாவட்ட செயலக விசேட குழுக்கூட்டத்தில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

பருத்தித்தீவில் காணப்படுகின்ற 17 குடும்பங்களின் காணிகளில் 11 குடும்பங்களின் காணிகள் வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் விடுவிக்கப்பட்டுள்ளன. அதேவேளை இன்னமும் 6 குடும்பங்களுக்கான 4 ஏக்கர் காணி விடுவிக்கப்படாதுள்ளது.

குறித்த காணிகளையும் விடுவிக்க வேண்டும் என்று ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் குறிப்பிட்டார். (ச-125)

# கடலட்டைப் பண்ணைகளில் அதிக சிறுவர் பணியாளர்கள்

## அதனூடான வருவாயை வைத்து போதைக்கு அடிமையாகும் நிலை

யாழ்ப்பாணம், செப். 14

கடலட்டைப் பண்ணைகளில் அதிகளவு சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் போதைக்கு ஆட்படுவதற்கும் இதுவே ஒரு காரணமாக இருக்கின்றது என யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

அல்லைப்பிட்டிப் பகுதியில் இயங்கும் கடலட்டைப் பண்ணைகளில் சிறுவர்கள் அதிகளவு பணிபுரிகின்றனர். இதனால் அவர்கள் பாடசாலைகளில் இருந்து இடைவிலகியதுடன், கடலட்டைப் பண்ணைகளில் தொழில்புரிவதால் கிடைக்கும் பணத்தைக் கொண்டு போதைப்பொருள்களைப் பெற்று அதற்கு அடிமையாகின்றனர் என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, சிறுவர்களை பணிக்கு அமர்த்தினால் குறித்த கடலட்டைப் பண்ணைகளில் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-125)

## மணலகழ்வைக் கட்டுப்படுத்த

# மணற்காட்டில் காவலரண்கள்

சட்டவிரோத மணல் அகழ்வுகளைத் தடுப்பதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி காவலரண்களை அமைப்பது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சிறப்புக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

மணற்காட்டில் அண்மைக்காலமாக மணலகழ்வு அதிகரித்துள்ளது என்றும், பொலிஸாருக்கு இது தொடர்பில் தெரிவித்தும் பயனில்லை என்றும் கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இதையடுத்தே மணற்காட்டில் காவலரண்களை அமைத்து மணற்கடத்தலைத்தடுப்பது என்று முடிவெடுக்கப்பட்டது.

அரியாலை, அராலி உள்ளிட்ட பகுதிகளில் அதிகரித்துள்ள மணற்கடத்தல் தொடர்பிலும் சபையின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இதையடுத்து அந்தப் பகுதிகளிலும் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி காவலரண்களை அமைத்து கண்காணிப்பை மேற்கொள்வது என்று முடிவெடுக்கப்பட்டது. (ம-125)

# 1983 கறுப்பு ஜூலைக் கலவரம் நியாயப்படுத்த முடியாத கொடூரம்

## அநுர சாட்டை

இலங்கை வரலாற்றில் கறுப்பு ஜூலைக் கலவரம் மிகப்பெரும் கறுப்புப் பக்கம். என்றுமே நியாயப்படுத்த முடியாத கொடூரம் என்று ஜே.வி.பி.யின் தலைவரான அநுர தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு இளைஞர்களும், தெற்கு இளைஞர்களும் மண் உரிமைக்காகப்போரிட்டனர். இன்று போர் முடிந்துவிட்டது, ஆனால் நாம் அனைவரும் தோல்வி அடைந்தவர்களாக நிற்கின்றோம். ஏனெனில் எமது நாட்டு இடங்கள் இந்தியாவுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அந்தநாடுதான் உரிமையாளராக மாறியுள்ளது. மாவட்ட அதிகாரசபைக்கான தேர்தலின் போது, யாழ்ப்பாணத்தில் கட்டாயம் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக யாழ். நூலகத்தை எரித்து வாக்குப்பெட்டிகளை ஜே.ஆர்.ஜெயவர்த்தன நிரப்பிக் கொண்டார். காமினி ஜயவிக்கிரம பெரேரா என்ற பொலிஸ் அதிகாரியே இந்தச் செயலை வழி நடத்தியுள்ளார்.

அதன்பின்னர் கறுப்பு ஜூலை அரங்கேற்றப்பட்டது. இலங்கை வரலாற்றில் இதுதான் கறுப்புப் பக்கம். என்றுமே நியாயப்படுத்த முடியாத கொடூரம்.

இவ்வாறான அவலங்களால்தான் ஆயுதப் போராட்டம் உருவாகி, தற்கொலைப் போராளிகள்கூட உருவாகினர். மன்னாரை மீட்பதற்கு கடும் சமர் இடம்பெற்றது. அது தமது மண்ணென வடக்கு இளைஞர்கள் போரிட்டனர், அந்தப் பகுதியை தம்முடன் இணைத்துக்கொள்ள தெற்கு இளைஞர்கள் போரிட்டனர்.

ஆனால் இன்று மன்னாரில் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணி அதானிக்கு வழங்கப்பட்டுள்ளது. பூநகரிக்காகவும் சண்டை இடம்பெற்றது.

அந்த இடமும் காற்றாலை மின் உற்பத்திக்காக அதானிக்கு வழங்கப்படவுள்ளது.

திருகோணமலையில் பொருளாதார நிலையம் அமைப்பதற்காகவும் இந்தியாவுக்கு இடங்கள் வழங்கப்படவுள்ளன. இந்தியாதான் இன்று உரிமையாளராகிவிட்டது - என்றார். (ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மழைவிட்டும் தூவானம் விடாத மாதிரி நல்லூர்த் தேர் முடிஞ்சும் இன்னும் சப்பறத்து நெரிசல் பற்றித்தான் பேஸ்புக்கிலையும், மூலைமுடுக்கிலையும் ஒரே கதை. அந்தளவுக்கு சப்பறத்தைப் பாக்கப் போன கனபேர் சக்கையாப் பிழிபட்டு, நசிஞ்சுதான் பின்வீதியால தப்பி வந்திருக்கினம். இப்பிடிச் சனம் வருமெண்டு கோயில்காரரும் எதிர்பார்த்திருக்கமாட்டினம் தான். ஆனால் சனம் நெரிபடுகுது, போக ஏலாமல் அந்தரப்படுகுது எண்டு தெரிஞ்சவுடனேயே அங்கால றோட்டை மறிச்சு அடிச்ச தகரங்களைக் கழட்டி , அதைத் திறந்திருக்க வேணும். ஆனால், கோயில்காரரின்ர சிவப்புவேட்டிப் படை , நெரிபட்ட சனத்துக்கு இன்னும் இடைஞ்சல் குடுத்து, கண்டபடி பேசிக் கொண்டிருந்ததே தவிர உருப்படியா ஒரு தகரத்தைக் கூட பிடுங்கேலை. எரியிற வீட்டில் பிடுங்கி லாபம் பார்த்த சில ஜென்மங்களும், சனம் போகவரமுடியாமல் முக்கித்தக்கின வீதியில நிண்டதுகளும் நெரியிற சனத்தில பொம்பிளைப் பிள்ளையளை இன்னும் நெருக்கி, கண்டபடி கை வைச்சு தங்கட விளையாட்டைக் காட்டியிருக்கினம். இப்பிடியெல்லாம் கோயிலுக்கு வந்த சனம் சீரழியிறதுக்கு முக்கியமான காரணமே, யாழ்ப்பாணத்துக்கு வாற பருத்தித்துறை மெயின் றோட்டை, தகரத்தால அடைச்சு வைச்சதுதான்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான இந்த றோட்டை இப்பிடி தங்கட இஷ்டப்படி அடைச்சு வைக்க கோயில்காரருக்கு எந்த உரிமையும் இல்லை. இப்பிடி ஒரு தனியாள் றோட்டை மறிச்சு தகரம் அடிச்சால் வீதி அபிவிருத்தி அதிகாரசபை கையைக் கட்டிக்கொண்டு வேடிக்கை பார்க்குமோ? இல்லாட்டி அதைப் பிடுங்கியெறியுமோ? எல்லாரும் எளியவையிட்ட பாயுறதும், வலியவையிட்ட பம்முறதும்தான் வாடிக்கையாப் போட்டுது. சரி, ஒரு காரண காரியம் இல்லாமல் எதுக்கு அந்த றோட்டை இப்ப நாலைஞ்சு வருசமா கோயில்காரர் அடைச்சு வைச்சிருக்கினம் எண்டு முருகனுக்குக் கூடத் தெரிஞ்சிருக்காது. அந்த றோட்டில் உள்ள ஐஸ்கிறீம் கடைக்காரருக்கும் கோயில்காரருக்கும் நாலைஞ்சு வருசத்துக்கு முதல் ஏதோ வாய்க்கால் தகராறு. அதால தான் அந்த ஐஸ்கிறீம் கடைக்காரரை ஓரம் கட்டுறதுக்காக, இப்பிடி றோட்டை மறிச்சு தகரம் அடிபடுகுது எண்டு இடையால ஒரு கதை ஓடுது. ஆனால் அது எந்தளவு உண்மையோ தெரியாது.

முந்தநாள் சப்பறத்தில இவ்வளவு சீரழிவு நடந்த பிறகும், அந்தத் தகரத்தைப் பெடியள் பிடுங்கி எறிஞ்ச பிறகும் கூட, றோட்டைத் திறந்து போக்குவரத்தைச் சீராக்கிறதுக்கு கோயில் நிர்வாகத்துக்கு மனம் வரேலை. ஏதோ சாட்டுக்கு அந்த றோட்டின்ர ரண்டு சைட்டாலையும் ஒவ்வொரு தகரத்தைத்தான் கழட்டினவை. சனம் பொட்டுக்கால போறமாதிரித்தான் அந்த ஒற்றைத்தகர இடைவெளிக்குள்ள போய்வந்தது. தங்கமலை ரகசியத்தை விடவும் இந்தத் தகரங்களுக்குப் பின்னால வேற ஏதோ இரகசியம் இருக்குமோ? அடுத்தவருசமாவது, இப்பிடி தகரம் அடிச்சு சனத்தைக் கஷ்டப்படுத்தாமல் இருக்கிற அலுவல்களை கோயில்காரர் பாக்கவேணும். அப்பிடியும் தகரமடிச்சு, றோட்டை அடைச்சால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையும், மாநகரசபையும் உடன நடவடிக்கை எடுக்கோணும். இல்லாட்டி பெடியள் இந்தமுறை தகரத்தைப் பிடுங்கினமாதிரி சட்டத்தைக் கையில் எடுத்தால், அது பெரும் பிரச்சினையாகிடும். - பட்சி



padsi@uthayan.com

# ஜனாதிபதி வெளிநாடு பயணம்; அமைச்சுப் பொறுப்பு நால்வரிடம்

கொழும்பு, செப். 14

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச பயணத்தை மேற்கொண்டுள்ள நிலையில், ஜனாதிபதியின் கீழ் உள்ள அமைச்சுகளை மேற்பார்வை செய்வதற்காக 4 இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி தொழில்நுட்பம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புப் பிரதி அமைச்சராக இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், பெண்கள், சிறுவர் மற்றும் சமூக சேவைகள் பிரதி அமைச்சராக இராஜாங்க அமைச்சர் அனுபா பாஸ்குவல், பிரதி நிதியமைச்சராக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பிரதி பாதுகாப்பு அமைச்சராக இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கியூபா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு நேற்றுக் காலை புறப்பட்டுள்ளார். (ச-இ)

# பரிசளிப்பும் ஆண்டு விழாவும்

யாழ்ப்பாணம், செப். 14

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடலால் நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணக் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் ஆண்டுவிழாவும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் கலைக்கூடலின் இணைத்தலைவர் இ. இளங்கோவன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ச)






## நல்லூரான் சிறப்பம்சம்

### தீர்த்தமாடும் எங்கள் திருமுருகா

தீர்த்தமாடும் எங்கள் திருமுருகா
தீர்த்து வைப்பாயா எம் துயரை
தீரா நோயாய் தொடருதய்யா
வேராய் வாழ்ந்த இடம் போகுதய்யா
போர் முடிந்த வாழ்வின்னும் விடியவில்லை
நூறுமுறை அழுதும் துயர் முடியவில்லை
ஏறுமயில் ஏறிவரும் எம்முருகா
ஆறுதலைத் தந்திடய்யா எம்வாழ்வில்

புலோலியூர் வேல்நந்தன்

### எமைக் காக்கும் முருகா...

செந்தமிழின் காவலனே செவ்வேலின் நாயகனே
செங்கமல மலரணிந்து செவ்விதழில் புன்னகைத்து
நல்லைப் பதியமர்ந்து நானிலத்தைக் காத்திடுவாய்
நாடியடி பணிந்தவரின் நலம் காக்க வா முருகா

ஓங்கார மந்திரத்தால் நம் அகங்காரம் அழித்தவ்னே
ஔவைக்கு தமிழ் தந்து அமிழ்தமிழின் அரணாய்
தங்கத் தமிழ் சந்தத்தில் தரணியெங்குமுன் புகழ்பாட
தமிழர் எமைக் காத்திடவே வா முருகா!

கேதீஸ்வரி (சாந்தி) சயந்தன்

# வல்லிபுர ஆலயச் சூழலில் மாயவனைப் பிரியமனமின்றி திருவடியில் உயிர்நீத்த பக்தர்!

யாழ்ப்பாணம், செப். 14

கடந்த முப்பது வருடங்களாக வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் தொண்டாற்றி அங்கு காலத்தைக் கழித்துவந்த முதியவர் ஒருவர் மாயவனின் திருவடி நிழலிலிருந்து பிரிவதற்கு மனமின்றி , அங்கேயே உயிர் துறந்துள்ளார். இந்தச் சம்பவம் அங்கு நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சுட்டியபுலம் வசாவிளானைச் சேர்ந்த முருகன் தியாகு (வயது -76) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வல்லிர ஆழ்வார் ஆலய உற்சவம் ஆரம்பமாகவுள்ள நிலையில் அங்குள்ள யாசகர்களை பிறிதொரு இடத்துக்கு மாற்றும் முயற்சி ஆலய நிர்வாகத்தினரால் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பல யாசகர்கள் வேறு இடத்துக்கு மாற்றப்பட்டனர்.

குறித்த வயோதிபர் தான் மாயவனின் திருவடி நிழலைவிட்டுச் செல்ல முடியாதென மறுத்து மனவேதனை அடைந்தார். அந்தப் பகுதியில் உள்ளவர்களிடம் தனது நிலைபற்றி தெரிவித்து உணவு அருந்துவதைத் தவிர்த்து வந்துள்ளார்.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சுகாதாரப் பிரிவினரது உதவியுடன் அவரை வேறு இடத்துக்கு மாற்றுவதற்காக அவ்விடத்துக்குச் சென்றபோது அவர் சடலமாக காணப்பட்டுள்ளார்.

வல்லிபுர மாயவனின் திருவடி நிழலில் 30 ஆண்டுகளுக்கு மேலாக தொண்டாற்றிய அவர் பிரிய விருப்பின்றி அங்கேயே உயிரிழந்துள்ள விடயம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ச-100)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரானின் தேர் வலக் காட்சிகள்

வரலாற்றுப் பிரசித்திபெற்ற நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா பல்லாயிரம் அடியவர்கள் சூழ நேற்று பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-66,17)







படங்கள் : சிவசாந்தன்



## எனது பேர்த்திக்கு...

யாழ்ப்பாணம், செப்.14

யாழ்ப்பாணம், பரமேஸ்வராச்சந்தியில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் சிறுமி ஒருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சிறுமியின் பாட்டி நேற்று வாக்குமூலம் அளித்துள்ளார். அதில் சிறுமியின் சாவுக்கு தானே காரணம் என்றும் குறிப்பிட்டுள்ளார். இன்று நீதிமன்றில் அவர் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமிக்கு உயிரிழப்புக்கு தானே காரணம் என்று பாட்டி வாக்குமூலம் வழங்கியநிலையில், அவர் மீது கொலைக் குற்றச்சாட்டு பதிவு செய்யப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் பரமேஸ்வராச் சந்தியில் உள்ள தனியார் விடுதி ஒன்றின் அறையில் இருந்து 12 வயதுச் சிறுமி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். சிறுமியின் பாட்டியுன் அந்த அறையில் இருந்து ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அறையில் இருந்து கடிதம் ஒன்றும் மீட்கப்பட்டிருந்தது. ஆரம்பகட்ட விசாரணைகளின் அடிப்படையில் சிறுமிக்குப் பாட்டியே நஞ்சூட்டிவிட்டு, தானும் நஞ்சருந்தியிருக்கலாம் என்றும் முதலில் சந்தேகிக்கப்பட்டது.

இந்தநிலையில் நேற்று பாட்டி ஆபத்தான நிலையில் இருந்து விடுபட்டு, சாதாரணநிலையை அடைந்தமையால் அவரிடம் பொலிஸார் வாக்குமூலம் பெற்றனர்.

'நான் மன்னார் மாவட்டத்தில் மருத்துவமாதுவாகப் பணியாற்றுகிறேன். எனக்கு (வயது -55). எனது மகளுக்கும் முஸ்லிம் நபர் ஒருவருக்கும் திருமணமானதால் பிறந்த பெண்ணே என்னுடன் அறையில் இருந்த பேர்த்தி. ஆனால் மகள் முதல் கணவரைப் பிரிந்து வேறு திருமணம் செய்துவிட்டார். மகளின் முதல் கணவரும் இன்னொரு திருமணம் செய்துதிருகோணமலையில் வசித்து வந்தார். பேர்த்தியை சிறுவயது முதல் நானே வளர்த்து வந்தேன். இந்தநிலையில் சில வருடங்களுக்கு முன்னர் அவளைத் தான் வளர்க்கப்போவதாக எனது மகளின் முதல் கணவர் (முஸ்லிம்) வந்து எனது பேர்த்தியை அழைத்துச் சென்று விட்டார்.

இதனால் என் பேர்த்தியின் எதிர்காலம் பற்றி எனக்குப் பயம் ஏற்பட்டிருந்தது. அவளைப் பற்றிய கவலையால் முன்னரும் ஒரு தடவை உயிர் மாய்க்க முனைந்து காப்பாற்றப்பட்டிருந்தேன். இந்தநிலையில் திருகோணமலைக்குச் சென்று எனது மகளின் முதல் கணவரிடம் கெஞ்சிக் கூத்தாடி, சில தினங்கள் என் பேர்த்தியை என்னோடு அனுப்புமாறு அழைத்துக் கொண்டு யாழ்ப்பாணம் வந்தேன்.

பேர்த்திக்கு மனநலம் சரியில்லாததால், தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற யாழ்ப்பாணம் வந்ததாகச் சொல்லி, தனியார் விடுதியொன்றில் அறையெடுத்து தங்கினோம். பின்னர் மருந்தகங்களுக்குச் சென்று சில மாத்திரைகளையும் ஊசி மூலம் ஏற்றும் மருந்தையும் வாங்கினேன். நான் மருத்துவமாது என்பதற்கான அடையாள அட்டையை வைத்திருந்ததால், மருந்துகளை வாங்குவதில் சிரமம் இருக்கவில்லை. பின்னர் அறைக்கு வந்து பேர்த்திக்கு தூக்கமாத்திரைகளைக் கொடுத்துவிட்டு, அவள் தூங்கிய பின்னர் ஆபத்தான மருந்தை ஊசி மூலம் செலுத்தினேன். அதன் பின்னர் அந்த மருந்தை எனக்கும் செலுத்தினேன். ஆனால் அவள் இறந்துவிட்டாள். நான் உயிர் பிழைத்துவிட்டேன்" என அவர் வாக்கு மூலம் வழங்கியுள்ளார்.

சிறுமியின் உடல் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உள்ள நிலையில், உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை தொடர்பான விவரங்கள் இன்னமும் வெளிப்படுத்தப்படவில்லை. இந்தநிலையில், சிறுமியின் பாட்டி இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார்.

(அ-ன-26)

# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. உறவினர்களால் குடும்பத்தில் சிறு சிறு சங்கடங்கள், வீண் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்கள் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மற்றவர்களுடன் பேசும்போது மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**கடகம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்கு வீட்டில் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைக்கக்கூடும்.

**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். பொறுமை அவசியம்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. மகிழ்ச்சி ஏற்படும். நண்பர்களைச் சந்தித்து மகிழும் வாய்ப்பு ஏற்படும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்புண்டு. வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் செலுத்தவும். உறவினர்கள் வழியில் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும்.

**தனுசு:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். காரிய அனுகூலம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. மனவருத்தங்கள் நீங்கும்.

**மகரம்:** மனதில் இனம்தெரியாத குழப்பம் ஏற்படும். புதிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டாம். உறவுகளால் செலவுகள் ஏற்படும். குடும்பத்தில் குழப்பம் ஏற்பட வாய்ப்புள்ளது.

**கும்பம்:** பிறருக்குக் கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. எதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும் முடிந்துவிடும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**மீனம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். வீண் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. புதிய முயற்சியைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## நிகழ்நிலையில் அமோக அறுவடை

இம்முறை வெளியான உயர்தரப்பரீட்சைப் பெறு பேறுகளின் அடிப்படையில், பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதியான மாணவர் எண்ணிக்கையில் கிழக்குமாகாணமும், வடக்கு மாகாணமும் முதலிரு இடங்களையும் தம்வசமாக்கி யுள்ளன. அதிலும் வடக்கின் மன்னார் மாவட்டம், அதிகள வானோர் பல்கலை அனுமதிக்குத் தகுதிபெறும் முதல்நிலை மாவட்டமாக முன்னேற்றம் கண்டுள்ளது. அண்மைக்கால மாக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் – தமிழர் தாயகத்தில் – கல்விநிலை மோசமான சரிவைச் சந்தித்து வந்த நிலையில், இந்தச் செய்தி ஓரளவுக்கு நிம்மதியை உண்டாக்கியுள்ளது.

இம்முறை அதிகளவான மாணவர்கள் இவ்வாறு பல் கலை அனுமதிக்குத் தகுதிபெறும் நிலையை அடைந்தமைக் குப் பின்னால் பல காரணிகளை இனங்காணமுடிகின்றது. அவற்றுள் மிகமுக்கியமானது 'நிகழ்நிலைக் கற்றல்'. இம் முறை உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் அதிகள வான கற்றல் நேரத்தை நிகழ்நிலைக் கற்றலே ஆக்கிரமித்தி ருந்தது. ஏனெனில் அவர்கள் உயர்தர வகுப்புகளுக்கு காலடி எடுத்துவைத்த கையோடே, கொரோனாவும் இலங்கைக்குள் புகுந்து குடித்தனம் செய்யத் தொடங்கிவிட்டது. பெருந்தொற் றுக் காரணமாக நாடு முடக்கப்பட்டது. பாடசாலைகள் இயங் கவில்லை. பின்னர் பொருளாதார நெருக்கடியின்போது மறுபடியும் முடக்கம். இந்தநிலையில்தான் நிகழ்நிலைக் கற் றல் வகுப்புகள் அறிமுகமாகின. வீட்டில் இருந்தபடியே 'ஸூம்' முதலான செயலிகள் மூலம், பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் பாடங்களைப் போதிக்கத்தொடங்கினர். ஆனாலும் இந்தத் திட்டம் தொடர்பில் பலரும் திருப்தியடையவில்லை. இத்தகைய நிகழ்நிலை வகுப்புகள் மாணவர்களை செல்போனுக்கு அடிமையாக்கிவிடும், மாண வர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே நேரடித் தொடர்பு இல்லையென்பதால் மாணவர்கள் பாடங்களைச் சரிவரக் கிரகிக்காமல் செல்போனைத் தூரவைத்துவிட்டு தம்பாட்டில் இருந்துவிடுவார்கள், மாணவர்களின் கண்களுக்குப் பாதிப்பு, தொடர்பாடல் சமிக்ஞை குறைந்த மாணவர்கள் சீராக நிகழ் நிலையில் கற்கமுடியாது என்பனபோன்ற பல குற்றச்சாட்டுகள் நிகழ்நிலை வகுப்புகள் மீது வைக்கப்பட்டன. அவற்றில் உண்மைகளும் இருக்கவே செய்தன. ஆனால் இந்தக் குற்றச் சாட்டுகளை முன்வைத்தவர்கள் இன்னொரு யதார்த்தத்தைக் கவனிக்கத் தவறிவிட்டனர். இந்த முடக்கங்களின் போது பெற்றோரும் வீடுகளில் இருந்தனர் என்பதே அது.

என்னதான் மாணவர்களுக்கு சுயகற்றலே சிறந்தது என்றாலும், பெற்றோரின் அருகிருப்பும், கண்காணிப்பும் அந்தக் கற்றலை இன்னும் உயர்புள்ளிக்குக் கொண்டு செல் லும். கொரோனா மற்றும் பொருளாதார நெருக்கடிகளால் நாடு முடக்கப்பட்டபோது பெற்றோரும் பிள்ளைகளோடு வீடுகளுக்குள் இருக்கவேண்டியிருந்தது. என்னதான் பிள் ளைகள் செல்போனோடு இருந்தாலும், அவர்கள் சீராகக் கற் கிறார்களா என்று அவதானிப்பதோடு மட்டுமல்லாது பிள் ளைகளுக்கு அருகில் இருந்து என்னென்ன பாடங்கள் எவ்வ கையில் போதிக்கப்படுகின்றன என்பதை அறியவும் முடக்க காலம் பெற்றோருக்கு ஒரு வாய்ப்பை அளித்தது. இதனால் தங்கள் பிள்ளைகளின் கற்றல் பலம், பலவீனம் என்பதை அவர்கள் கண்முன்னே கண்டறிந்து களையவும் வழிவகை ஏற்பட்டது. தாங்கள் கற்கும் போது, அதற்கு உறுதுணையாக பெற்றோர் அருகிருப்பதும், ஆதரவு தருவதும் பிள்ளைகளுக்கு இன்னும் கற்றல் மீதான உத்வேகத்தை ஏற்படுத்தும். இவ்வ ளவும் சேர்ந்தே 'ஸூம் குட்டிகளாக' இம்முறை உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய வடக்கு,கிழக்கு மாணவர்களை கல் வித்துறையில் அதிகளவில் பிரகாசிக்கவைத்துள்ளது. கொரோனா, பொருளாதார நெருக்கடிகளால் உண்டான முடக் கநிலை நாடெங்கும் தானே இருந்தது? அப்படியானால் ஏனைய இடங்களில்ஏன் அப்படி முன்னேற்றம்நிகழவில்லை? என்று சிலர் எண்ணக்கூடும். பொதுவாகவே ஏனைய இடங் களை விடவும் கல்விக்கு அதிகமுக்கியத்துவம் கொடுப்பவர் கள் தமிழர்களே. எனவே ஏனைய இடத்திலுள்ளோர் முடக் ககால மன இறுக்கத்தை தளர்த்த பொழுதுபோக்குகளில் அதிக ஆர்வம் காட்ட, தமிழர்களோ தங்கள் பிள்ளைகளைக் கல் வியை நோக்கி வழிப்படுத்தியிருக்கின்றனர். ஆக, நிகழ்நிலை வகுப்புகளை மிகச் சரிவரக் கையாண்டு அதன் பயனாக தமிழ் மாணவர்கள் அமோக அறுவடையைச் செய்திருக்கிறார்கள்.

### நாளொரு நல்வார்த்தை

மலர்களின் வாசம் காற்று வீசும் திசையில் மட்டுமே போகும். ஆனால் ஒருவர் செய்யும் தர்மமோ நாலாதிசையும் செல்லும்.

–சாணக்கியர்–




# இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்திய விசாரணை தேவை!

## அமெரிக்கா வலியுறுத்து

**கொழும்பு, செப். 14**

**இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்தியதாக சுயாதீனமான, வெளிப்படைத் தன்மையான, பக்கச்சார்பற்ற நல்லிணக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அமெரிக்கா வலியுறுத்தி யுள்ளது.**

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது கூட்டத்தொடரில் நேற்றுமுன் தினம் உரையாற்றிய ஐ.நா.வுக்கான அமெ ரிக்கப் பிரதிநிதி கெலி பில்லிங்ஸ்லி இவ்வாறு வலியுறுத்தியுள்ளார். அவர் மேலும் தெரி வித்ததாவது:

சிறுபான்மை மதங்களின் மத்தியில் பதற்றம் அதிகரித்துள்ளது. பயங்கரவாதத் தடைச்சட் டம் நீக்கப்பட்டு சர்வதேச நியமங்களுக்கேற்ப புதிய சட்டம் உருவாக்கப்பட வேண்டும். நிலையான சமாதானத்துக்கு கருத்துச்சுதந்தி ரம், அமைதிவழி ஆர்ப்பாட்ட உரிமைகள் என்பன பாதுகாக்கப்பட வேண்டும். அரசாங்கம் கைய கப்படுத்திய நிலங்களை மீளளிக்கும் செயற்பா டுகள் ஆரம்பக் கட்டத்திலேயே உள்ளன. எனி னும் நாங்கள் அதனை வரவேற்கிறோம். இலங்கையின் அபிவிருத்திக்கும், நம்பகத் தன்மை வாய்ந்த பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க முயற்சிகளுக்கும் ஐ.நா. எந்த வகையில் உதவ முடியும்? - என்றார். (ம-6)

### பல்கலைக்குத் தகுதி

## மாவட்ட மட்டத்தில் மன்னார் முதலிடம்!

மன்னார், செப். 14

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட் சைப் பெறுபேறுகளில், பல்கலைக்கு மாணவர்கள் தகுதிபெறும் வீதத்தில் மாவட்டப் பட்டியலில் மன்னார் மாவட்டம் தேசியத்தில் முதலிடத்தில் உள்ளது. மன் னார் மாவட்டத்தில் பல்கலைக்கழக நுழை வுச் சராசரி 74.13 என்றவாறாக உள் ளது. 71.92 என்ற சராசரியுடன் திருகோ ணமலை மாவட்டம் இரண்டாவது இடத் திலும், 71.70 என்ற சராசரியுடன் முல் லைத்தீவு மாவட்டம் மூன்றாம் இடத்திலும் உள்ளன. இதேவேளை மாகாணங்க ளின் பட்டியலிலும் கிழக்கு முதலிடத்திலும் வடக்கு இரண்டாம் இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-213)

## 19.4 வீதத் தீர்மானங்களையே நிறைவேற்றியுள்ளது இலங்கை

கொழும்பு, செப். 14

2015ஆம் ஆண்டு ஐ.நா.மனித உரிமைகள் பேரவை நிறைவேற்றிய தீர்மானங்களுள் 19.4 வீதமானவற்றையே இலங்கை நிறை வேற்றியுள்ளதாக ஐ..நா. கண்காணிப்பு அலு வலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

கடந்த எட்டு வருடங்களில் ஐ.நா.மனித உரி மைகள் பேரவை நிறைவேற்றிய தீர்மா னங் களுள் 30/1 தீர்மானங்களுள் 7 தீர்மானங்கள் மாத்திரமே அதாவது 19.4 வீதமானவையே இலங்கையால் நிறை வேற்றப்பட்டுள்ளன.

7 தீர்மானங்கள் பகுதியளவில் நிறை வேற்றப் பட்டுள்ளன. 8 தீர்மானங்களில் பெரியளவில் முன்னேற்றங்கள் காணப்படவில்லை. நான்கு தீர்மானங்களில் எதுவித முன்னேற்றமு மில்லை. (ம-6)

**நாளை** 15.09.2023 வெள்ளிக்கிழமை ஆவணி 29

சுபநேரம் : 06.03 - 07.33

ராகுகாலம் : 10.33 - 12.03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச வருமானம் குறைந்ததால்

# அடுத்த ஆண்டு புதிய வரிகள்!

## ஆலோசிக்கின்றது ரணில் அரசு

**கொழும்பு, செப். 14**

**இலங்கையில் வரி வருமானம் எதிர்பார்த்த வருவாய் இலக்குகளை விடக் குறைந்துள்ளதால், அரசாங்கம் அடுத்த ஆண்டு புதிதாக இரு வரிகளை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.**

செல்வ வரி மற்றும் பரம்பரை வரி என்பனவே அடுத்த ஆண்டு முதல் அறிமுகம் செய்யப்படவுள்ளன.

இதில் செல்வ வரி என்பது ஒருவர் கொண்டிருக்கும் சொத்தின் மீது விதிக்கப்படும் வரியாகும். பரம்பரை வரி என்பது ஒருவர், தமது மூதாதையரின் சொத்தில் இருந்து ஈட்டும் வருமானத்தின் மீது விதிக்கப்படும் ஒரு வகை வரியாகும்.

நாட்டின் நிதியை மேற்பார்வையிடும் புதிய நாடாளுமன்ற மேற்பார்வைக் குழு சமர்ப்பித்த அறிக்கையின்படி, அடுத்த ஆண்டு நடைமுறைக்கு வரும் இந்த வரிகளுக்குத் தேவையான சட்டத்தை உருவாக்குவதற்கு நிதி அமைச்சு பணிக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையில் இந்த மேற்பார்வைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக்குழுவின் அறிக்கையின்படி அரசாங்க செலவினங்கள் வருவாயை விட அதிகமாக இருக்கின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையின்படி இந்த ஆண்டு ஜனவரி முதல் ஜூன் வரையிலான பாதீட்டு பற்றாக்குறை 1.24 பில்லியன் ரூபாவாக இருந்தது என்று இந்தக் குழு சுட்டிக்காட்டியுள்ளது. இந்த ஆண்டின் முதல் அரையாண்டில், ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை, மூன்று முக்கியமான நிறுவனங்களான இலங்கை சுங்கம், உள்நாட்டு இறைவரி திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களம் ஆகியவற்றின் இலக்குகள் எட்டப்படவில்லை.

இதில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இந்த அரையாண்டுக்கான 1.667 டிரில்லியன் ரூபா வருமான மதிப்பீட்டில் 41.81 சதவீதமான 696.94 பில்லியன் ரூபாவை மாத்திரமே வசூலித்துள்ளது. இலங்கை சுங்கம் இதுவரை மதிப்பிடப்பட்ட 1.22 டிரில்லியனில் 32.79 சதவீதமான 400.07 பில்லியன் ரூபாவை வசூலித்துள்ளது. மதுவரித் திணைக்களம் மதிப்பிடப்பட்ட இலக்கான 217 பில்லியனில் 41 சதவீதமான 88.963 பில்லியன் ரூபாவை மாத்திரமே வசூலித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



# மரக்காலையில் தீ விபத்து; தளபாடங்கள் தீக்கிரை!

## நெல்லியடியில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 14

நெல்லியடியிலுள்ள மரக்காலை ஒன்றில் திடீரென ஏற்பட்ட தீப்பரவல் காரணமாக மரக்காலையில் ஒரு பகுதி முழுமையாக தீக்கிரையாகியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை நடந்துள்ளது. யாழ். மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவு வாகனம் வரவழைக்கப்பட்டு பெரும் முயற்சியின் பின் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இருப்பினும் மரக்காலையின் பின்பகுதியில் வைக்கப்பட்டிருந்த 30 இலட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் தீக்கிரையாகியுள்ளதுடன் மரம் வெட்டும் இயந்திரமும் பகுதியளவில் எரிந்து சேதமடைந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-100)

உலக தற்கொலை தினத்தை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை தற்கொலைக்கு எதிரான அமைப்பான 'சுமித்திரயோ' அமைப்பின் யாழ்.கிளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பண்ணை சுற்று வட்டப் பிரதேசத்தில் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. (ச)



# மூத்த பத்திரிகையாளர் சலீம் 75 ஆவது அகவையில் தடம்!

■ வீரகத்தி தனபாலசிங்கம்



அரை நூற்றாண்டுக்கும் அதிகமான காலமாக பிராந்தியச் செய்தியாளர்களாகப் பணியாற்றிவருபவர்கள் என்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இன்று ஒரு சிலரே இருக்கிறார்கள். கிழக்கு மாகாணத்தில் அதுவும் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் அத்தகைய நீண்டகால அனுபவமுடைய பத்திரிகையாளராக ஏ. எல்.எம்.சலீமைக் குறிப்பிட முடியும். தொடர்ந்தும் துடிப்புடன் பணியாற்றிவரும் அவர் இன்று 75 ஆவது அகவையில் பிரவேசிக்கிறார். அவரை ஆரோக்கியத்துடன் நீடுழி வாழவும் ஊடகத்துறைக்கு மேலும் பயனுறுதியுடைய பங்களிப்பைச் செய்யவும் வாழ்த்துவோம்.

நிந்தவூரைச் சேர்ந்த சலீம் 1966ஆம் ஆண்டு வீரகேசரியின் செய்தியாளராக பத்திரிகைத்துறையில் பிரவேசம் செய்தார். பிறகு சுதந்திரன், தினகரன், தினபதி, சிந்தாமணி, தினக்குரல் என்று பல பத்திரிகைகளின் பிராந்தியச் செய்தியாளராகப் பணியாற்றி தனது சேவையை விரிவுபடுத்தினார். உதயன் தினசரியின் அம்பாறை மாவட்டச் செய்தியாளராக அதன் தொடக்ககாலம் முதலிருந்தே சலீம் பணியாற்றிவருகிறார். இதனிடையே, அவரின் பணியின் தரம் கண்டு சில இலத்திரனியல் ஊடகங்களும்கூட அவரது சேவையை நாடின.

தகவல் தொழில்நுட்பத்தின் அபார வளர்ச்சி காரணமாக பத்திரிகையாளர்களின் செயற்பாட்டு முறைகளில் நவீன கருவிகளைப் பயன்படுத்தி கடைப்பிடிக்க வேண்டியிருக்கும் மாற்றங்களுக்கு தன்னை இசைவாக்கிக் கொண்டு தங்கள் பணியைத் தொடர்ந்தும் செய்துவரும் தமிழ்பேசும் பத்திரிகையாளர்களில் சலீமும் ஒருவர் எனலாம்.

வெறுமனே பிராந்திய செய்திகளை மாத்திரம் அனுப்பும் ஒரு செய்தியாளராக மாத்திரமல்ல, அரசியல், சமூகப் பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்த பெருவாரியான கட்டுரைகளையும் சலீம் எழுதிவந்திருக்கிறார். பத்திரிகையாளர்களுக்கு இருக்கவேண்டிய சமூகப் பிரக்ஞையின் பால் மிகுந்த சிரத்தை காட்டி தனது பணிகளை சலீம் முன்னெடுத்து வந்திருக்கிறார்.

பிரதானமாக அம்பாறை மாவட்டத்தை தனது களமாகக்கொண்டு செயற்பட்டு வந்த போதிலும், ஊடகவியலாளர்களின் உரிமைகள் மற்றும் நலன்களுக்காக குரல்கொடுக்கும் பல்வேறு அமைப்புகளில் முக்கியமான பங்கை வகித்த காரணத்தால் கிழக்கு மாகாணத்துக்கு அப்பால் வடமாகாணம், மலையகம் மற்றும் தலைநகர் கொழும்பு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் தமிழ் பேசும் ஊடகவியலாளர்கள் மத்தியில் மிகுந்த நட்புரிமை கொண்டவராக சலீம் விளங்குகிறார்.

முஸ்லிம் மீடியா போரம், இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் ஆகியவற்றின் ஸ்தாபக உறுப்பினரான சலீம், கிழக்கிலங்கைச் செய்தியாளர்கள் சங்கம், அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள் சம்மேளனம், தென்கிழக்கிலங்கை செய்தியாளர்கள் சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும் இருந்தார். 15 வருடங்களாக நிந்தவூர் மத்தியஸ்தசபையின் உறுப்பினராக இருந்து வரும் அவர் தற்போது நிந்தவூர் கலை இலக்கியப் பேரவையின் உபதலைவராகச் செயற்படுகின்றார்.

சலீமின் பத்திரிகைத்துறை சேவைக்காக அவர் பல்வேறு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருக்கிறார். கலாபூஷணம் விருது (2008), இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கமும் இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து வருடாந்தம் வழங்கும் வாழ்நாள் சாதனையாளர் விருது (2017), கல்முனை மாநகரசபையின் ஊடக முதுசம் பட்டம், உதயனின் வாழ்நாள் சாதனையாளர் விருது என்பவை அவருக்குக் கிடைத்த குறிப்பிடத்தக்க விருதுகள். சலீம் போன்ற மிகவும் நீண்டகால பிராந்தியச் செய்தியாளர்களின் அனுபவங்கள் இன்றைய இளம் தலைமுறை ஊடகவியலாளர்களுக்கு முன்னு தாரணமாக அமையக்கூடியவை. இன்னும் மூன்று வருடங்களில் சலீமின் பத்திரிகைத்துறை வாழ்வு ஆறு தசாப்தங்களைப் பூர்த்திசெய்யும். இந்த நீண்டகால அனுபவங்களை அவர் எழுதி நூல் வடிவில் கொண்டுவர வேண்டும்.

இன்றைய செய்தி நாளைய வரலாற்றின் அரை குறையான முதல் வரைவு என்று சொல்வார்கள். அதனால் தான் மூத்த ஊடகவியலாளர்களைப் பற்றி எழுதக்கிடைக்கும் சந்தர்ப்பங்களில் இந்தக் கோரிக்கையை முன்வைப்பதற்கு நான் தவறுவதில்லை. மூத்த பத்திரிகையாளர்களை வாழும்போதே வாழ்த்துவோம்.

## கடந்த 4 ஆண்டுகளில்

# 4 மில்லியன் மக்கள் வறுமையின் பிடியில்

கடந்த நான்கு வருடங்களில் இலங்கையின் சனத்தொகையில் நான்கு மில்லியன் பேர் வறுமையில் சிக்கியுள்ளனர் என்று அண்மைய ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

2019ஆம் ஆண்டு மூன்று மில்லியனாகக் காணப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் எண்ணிக்கை தற்போது நான்கு மில்லியனால் அதிகரித்து, 2023ஆம் ஆண்டில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் எண்ணிக்கை 7 மில்லியனாக அதிகரித்துள்ளது என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் மற்றும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் இணைந்து கடந்த வாரம் தேசிய குடிமக்கள் கணக்கெடுப்பு அறிக்கையை வெளியிட்டிருந்தன. 33.4 வீதமான குடும்பங்கள் உணவு, மருத்துவம் மற்றும் கல்வி போன்ற அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு கடன் பெறுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தொகை மதிப்பு புள்ளிவிவரத் திணைக்களத்தின் 2019 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, நாட்டின் சனத்தொகையில் 60 வீதமானவர்கள் ஏதோ ஒருவகையில் கடன் பெற்றுள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டில், குடும்பம் ஒன்றின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு சுமார் 60 ஆயிரம் ரூபா தேவைப்பட்டது. 2023ஆம் ஆண்டுக்குள் இந்தத் தொகை, ஒரு இலட்சத்து இரண்டாயிரமாக அதிகரித்துள்ளது என்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிவரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை (PSDG)

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை (PSDG)- 2023 கொண்டு கீழ்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02. **தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,** புத்தூர். சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிட மிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டட திருத்த வேலைகளுக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 03/2020(i) ஆம் இலக்க 11.01.2021 ம் திகதிய 04/2016(ii) ஆம் இலக்க 08.05.2019 ஆம் திகதிய 04/2016(iii) ஆம் இலக்க 18.02.2021 ஆம் திகதிய மற்றும் 04/2016(iv) இலக்க 09.02.2023 ம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கு அமைவாக வட மாகாணத்தை சார்ந்தவரும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

05. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டுமான துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

06. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் தொலைபேசி இல:- 021-205 8867, தொலைநகல்: 021-205 8866)** அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09:00 மணிமுதல் மாலை 15:00 மணிவரை 2023.09.14 ஆம் திகதியில் இருந்து 2023.10.02 ஆம் திகதி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

08. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்** அவர்களிடமிருந்து 2023.09.14 ஆம் திகதியிலிருந்து 2023.10.02 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் காலை 09:00 மணிக்கும் 15:00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா **2000/-** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

09. கேள்வியினை இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர் பெறுகைக்குழு , வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு 2023.10.03 ஆம் திகதி பி.ப 14:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

10. கேள்வி. கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம். கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது

11. கேள்வி கோரல் பற்றிய முன் கேள்வி கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 2023.09.21 ஆம் திகதி மு.ப.10:30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக் கப்படும் இறுதித் திகதி யிலிருந்து கேள்வி செல்லு படியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | கேள்வி பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(13)/2/PSDG/2023/02 | முரசொலி வீதி திருத்தம் அச்சுவேலி | 1.22 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 49 நாட்கள் | 13,000.00 | 2023.12.19 |

**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை புத்தூர்.**

(cr.40564) N.1

2023.09.14




*மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 102 ஆவது ஆண்டு நினைவுதினம் வவுனியா குருமண் காட்டிலுள்ள பாரதியாரின் திருவுருவச்சிலையடியில் கடந்த 11ஆம் திகதி திங்கட்கிழமை வவுனியா நகர சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.* (ய-110-18)


## வேலையாள்கள் தேவை

சைவ உணவகத்திற்கும் அசைவ உணவகத்திற்கும் சப்ளையர். ரொட்டி மேக்கர். சமையலாளர் சமையல் உதவியாளர்கள். மேற்பார்வையாளர் தேவை. (cs.52090) (N.1)

**075 238 7405**

## வேலையாள்கள் தேவை

மல்லாகத்தில் உள்ள வியாபார நிலையத்திற்கு வேலையாள்கள் தேவை. சம்பள விபரம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும் (cs.52089) (N.1)

**077 464 5872, 076 689 4075**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்குருபாதம் துணை



# 6 ஆம் ஆண்டு குருபூசை, சைவசமய தீட்சை வழங்கல்

ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள்

கிளிநொச்சி, ஜெயந்திநகர் மகாதேவ ஆச்சிரம இரண்டாம் குருபீடாதிபதி ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் குருபூசை நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.

- காலம்: 15.09.2023 வெள்ளிக்கிழமை
- நேரம் : முற்பகல் 10.30 மணி
- இடம் : ஆச்சிரம மண்டபம்

அங்கத்தவர்கள்யாவரும், சிவனடியார்களும் பங்குபற்றி குருவருளை பெற்றுக் கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

**சைவ சமய தீட்சை வழங்குதல்**

- காலம்: 17.09.2023 ஞாயிற்றுக்கிழமை
- நேரம் : காலை 8.00 மணிமுதல்
- இடம் : ஆச்சிரம மண்டபம்

பங்குபற்ற விரும்புபவர்கள் தங்கள் பெயர், தொலைபேசி இலக்கம் என்பவற்றை ஆச்சிரம உபசெயலாளருடன் தொலைபேசி இலக்கம் 0774319281 ஊடாக அல்லது நேரில் 16.09.2023 இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

அன்பே சிவம்

அறங்காவலர், நிர்வாக உறுப்பினர்கள், மகாதேவ ஆச்சிரமம்.



கணபதி துணை

# அரியாலை, நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம் கூறுவிலை கோரல்

எமது தேவஸ்தானத்தின் மகா கும்பாபிஷேகம் 2024 ஆம் ஆண்டு நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. நடைபெறவுள்ள திருப்பணி வேலைகளுக்கான கூறுவிலை கோரப்படுகின்றது. கூறுவிலை சமர்ப்பிக்கவுள்ளோர் எதிர்வரும் 22.09.2023 முன்னர் சமர்ப்பிக்கவும். திருப்பணிவேலைகளின் விபரங்களை நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

(cs52083) (N.1)

தலைவர்


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 03 . 08 . 1928

மறைவு 07 . 09 . 2021

அமரர்

## கோமதி அம்மா நவரத்தினம்

(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை -
மட்டுவில் கமலாசனி, சாவகச்சேரி, டிறிபேக் கல்லூரி,
உசன் மகாவித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

ஆண்டுகள் இரண்டு கடந்தாலும் அம்மா இன்றும்
உங்கள் நினைவுகள் பசுமையாக உள்ளது
எங்கள் வாழ்விற்கு ஒளி கொடுத்த தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய முருகனை வேண்டுகின்றோம்

நினைவுகளுடன்

கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

சிவகுரு ஒழுங்கை,
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

(Cs 40534) (N.1)

# 5 ஆம் ஆண்டில் இதயம் சுமக்கும் நினைவுகள்



அன்னை மடியில் 04 . 03 . 1934

ஆண்டவன் பாதத்தில் 14 . 09 . 2018

## அமரர் சவேரியாப்பிள்ளை பிலிப்பு

அன்போடு எமை வளர்த்து நம்மை
ஆளாக்கி அவனியில் நாம்
நல்வாழ்வு வாழச் செய்த
எம் அன்பு நிறை அம்மாவே!
நீர் எம்மை விட்டுப் பிரிந்து
ஐந்து வருடங்கள் சென்றதுவோ
நின் அன்பான செயல்கள்
நம் வாழ்வு தனின் நிஜமாய் நிழலாடுகின்றன
நீர் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
உம் நினைவுகள் எம்மைவிட்டுப் பிரியாது
நீர் செய்த நல்ல செயல்களை நன்றியுடன்
நினைவு கூருகின்றோம் இந்நாளில்
நின் ஆன்மா இறைவனில் அமைதி பெற
இறையருள் வேண்டுகின்றோம்.

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

மாறா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(cs 52079) (N.1)


# வேலைக்கு ஆள்கள் தேவை

வடமராட்சி பிரதேசவாசிகள் விரும்பத்தக்கது

தொடர்புகளுக்கு:

ஜமுனா ஸ்ரோர்ஸ் நெல்லியடி.

077 237 9348

(cs26195) (N.1)


# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் அன்னலட்சுமி
சங்கரப்பிள்ளை

திதி: அமாவாசை (14.09.2023)
வியாழக்கிழமை



தோற்றம்
16.04.1943

மறைவு
25.08.2014

எம் அம்மா எம்மை விட்டு நீங்கி
நீண்டது ஒன்பது ஆண்டுகள்
எம் நினைவில் வாழ்வீர்கள்
நிறையும் எம் வாழ்நாள் வரை

"மலரகம்"
கொடைக்காடு வீதி,
கோண்டாவில் கிழக்கு.

குடும்பத்தினர்
077 958 7324

(cs 52049) (N.1)

# என்றும் நெஞ்சைவிட்டு நீங்காத நினைவலைகள்

33 ஆவது வருட 9 ஆவது வருட



உதயம்
18.06.1933

அஸ்தமனம்
20.08.1990



உதயம்
02.07.1935

அஸ்தமனம்
27.08.2014

தோலகட்டி, வயாவிளான்

## அமரர் வைத்திலிங்கம் நடராசா

(முன்னாள் பொறுப்பதிகாரி, வலி. கிழக்கு
பிரதேசசபை, - அச்சுவேலி)

திதி: 14.09.2023

தோலகட்டி, வயாவிளான்

## திருமதி சிவபாக்கியம் நடராசா

திதி : 16.09.2023

அன்புடனும், பாசத்துடனும், எம்முடன் வாழ்ந்து நாம் சிறப்புடன் வாழ வழிகாட்டி, எம்மை எல்லாம் விட்டு மறைந்த எங்களின் அன்புத் தெய்வங்கள் அப்பா, அம்மாவே ! ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும் எங்களின் இதயங்களில் உங்களின் நீங்காத நினைவலைகளை சுமந்தபடி ஆண்டு தோறும் நல்லூரானின் தீர்த்தக்கரையில் நின்று கொண்டு கண்ணீர் பூக்களினால் உங்களின் பாதங்களுக்கு சமர்ப்பிக்கும் நாங்கள்!

"துஷா இல்லம்"
சாமுவேல்மான், முதலாம் ஒழுங்கை,
உடுவில் மேற்கு, சுன்னாகம். 021 490 9283
இல. 27/5, மெமோறியல் லேன், மானிப்பாய்.
077 995 6974, 021 255 5252

என்றும் உங்களின் நினைவுகளில்
அன்பு மகன்மார், மகள்மார்,
மருமக்கள் மார், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Obituary Notice

| 25 |  | 10 |
| --- | --- | --- |
| 06 | | 09 |
| 1936 | | 2023 |

## Thambipillai Thaniganathan (Thani)

Retired Valuation Inspector (Sri Lanka and Zambia)

*Beloved Son of late Thambipillai and Kamalanayaki of Tellipallai. Brother of late T.K. Sekaram (Planter) and late Balasubramaniam (Postmaster). Brother-in-Law of late Mahes Sekaram and Pathma Balasubramaniam. Beloved Chithappa of Deepa Somasundaram (USA), Mano Sekaram (Sri Lanka), Mohan Sekaram (Australia), Balapadman (Sri Lanka), Balakirishan (Canada), Manthakini Sethunathan (Sri Lanka). Uncle-in-Law of Suji Somasundaram (USA), Githa Sekaram (Sri Lanka), Sashi Sekaram (Australia), Balalogini Balapadman (Sri Lanka), Sarada Balakirishan (Canada), Sethunathan Ramanathan (Sri Lanka). Beloved Grandfather of Niran, Bashar, Rajhar, Ramhar, Sharanya, Varsha, Urvashi, Madhavi, Anjali, Vygan, Prahan, Vaishali, Mayuran and Tharunan and Grandfather-in-Law of Dinouk, Nadia, Neema, Lavenia, Vrinda, Kamsayini and Anojah.*

***Viewing Wednesday, 13th September 5 to 9pm, and Thursday, 14th September 1 to 2pm.***

***Funeral Thursday, 14th September 2023, 2pm to 5pm.***

Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Avenue, Markham, Canada.

***Cremation at 12492 Woodbine Avenue Gormley, Canada.***

# ஓராண்டு நினைவஞ்சலி



கடந்த 26.08.2022 அன்று சிவபதமடைந்த நீர்வேலி மேற்கு, மாசுவன் சந்தி, நீர்வேலியைச் சேர்ந்த

## அமரர் சபாரத்தினம் கந்தசாமி


அவர்களின் ஓராண்டு நினைவஞ்சலி இன்று (14.09.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12.00 மணிக்கு மதிய போசன நிகழ்வும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மாசுவன் சந்தி,
நீர்வேலி மேற்கு, நீர்வேலி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
077 478 1791

(cs.51945) (N.1)

# மரண அறிவித்தல்

| தோற்றம் |  | மறைவு |
| --- | --- | --- |
| 14 | | 10 |
| 03 | | 09 |
| 1961 | | 2023 |

## திரு.சின்னத்துரை மகாலிங்கம்

யாழ். கல்வயலை பிறப்பிடமாகவும் லண்டன் (Mitcharm) ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சின்னத்துரை மகாலிங்கம் அவர்கள் கடந்த (10.09.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை தில்லைநாயகி தம்பதியரின் இளைய மகனும், முத்தையா (அமரர்) இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், ஈஸ்வரியின் அன்புக் கணவரும், மதுசன், மதுசா, சாளினி ஆகியோரின் அன்புத் தந்தையும், மணிவண்ணன் (அமரர்), மல்லிகாந்தன், மல்லிகாதேவி (அமரர்), மகேந்திரராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரதிவதனி, ஈஸ்வரன், ரமணி, ஐங்கரன், கெங்காதரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2023) வியாழக்கிழமை கல்வயல் அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**திரு.திருமதி சந்திரன் ரமணி**
**T.P: 076 881 4542**

(CS0567) A-1

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



நிகழும் சோபகிருது வருடம் ஆடித்திங்கள் 31 ஆம் நாள் (16.08.2023) புதன்கிழமையன்று அமரத்துவம் அடைந்த எம் அன்புத் தெய்வம்

### சங்கீத பூஷணம்

## அமரர் செல்லத்துரை குமாரசாமி

(கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ஓய்வுநிலை முன்னைநாள் பிரதி அதிபர் - SLEAS-1)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் ஆவணித் திங்கள் 29 ஆம் நாள் (15.09.2023) வெள்ளிக்கிழமை அதிகாலை 04.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, கீரிமலை புனித தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்பட்டு முற்பகல் 10.00 மணியளவில் சபிண்டீகரண கிரியைகள் நடைபெறும். மறுநாள் ஆவணித் திங்கள் 30 ஆம் நாள் (16.09.2023) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் **உடுப்பிட்டி கலாசார மத்திய நிலைய மண்டபத்தில்** நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு:**

எமது குடும்பத் தலைவர் **அமரர் செல்லத்துரை குமாரசாமி** அவர்களின் மரணச் சடங்கில் வருகை தந்து தவறவிடப்பட்ட நல் உள்ளங்கள் அனைவரும்

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**வீரபத்திரர் கோவிலடி,**
**[illegible] தெற்கு, உடுப்பிட்டி.**

**குடும்பத்தினர்**

(cs 26021) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னையில் நோய்த் தாக்கம்; மக்களுக்கு விழிப்புணர்வு

கிளி, செப். 14

தென்னை மரங்களில் ஏற்படும் நோய்த் தாக்கங்கள் தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டும் விழிப்புணர்வு நிகழ்வு கிளிநொச்சி பிரமந்தனாறு மயில்வாகனபுரத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

வடக்கு மாகாண தெங்கு அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. தென்னைகளில் ஏற்படும் செவ்வண்டு, கருவண்டு, வெண்புள்ளி நோய்த் தாக்கங்கள், அவற்றுக்கான சிகிச்சை, பயன்படுத்தப்படும் மருந்துவகைகள் ஆகியவை தொடர்பில் சபையின் முகாமையாளர் வைகுந்தன் தெளிவூட்டினார்.

(ச-113)


## வேலையாட்கள் தேவை

யாழ். திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியிலுள்ள எமது வியாபாரக் கட்டடத்திற்கு

1). சுத்திகரிப்பு தொழிலாளி (ஆண்/பெண்)
2). தோட்ட வேலையில் ஆர்வமுடைய தொழிலாளி (ஆண்)
3). வயரிங், பிளம்பிங் தெரிந்த பகுதிநேர வேலையாள்.

தொடர்பு:077 953 0496

## தவறவிடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் (Annai Nagaa Food City) இல் இருந்து (St Patricks College) வரை உள்ள வீதியில் பேருந்து வண்டி ஒன்றின் திறப்பு தவறவிடப்பட்டுள்ளது. யாரும் கண்டு எடுத்தால்

077 573 1318 Call me Plz
0777 667 715

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலக மாவட்ட விதாத உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி கோமதி மாயகிருஷ்ணன் அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி புனிதவதி பாலரட்ணம்

அவர்கள் கடந்த (12.09.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நலன்புரிக்கழகம், மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 13 . 03 . 1971



இறப்பு 12 . 09 . 2023

### இரத்தினகிரி ஆதித்தன்

இரத்தினகிரி ஆதித்தன் அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா இரத்தினகிரி செல்லம்மா இரத்தினகிரி தம்பதியரின் அன்பு புதல்வரும், கதிர்காமன் (கனடா), கந்தராஜா (இலங்கை), குணபூரணி (கனடா), சந்திரா (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சந்திரகாந்தா (கனடா) அவர்களின் மைத்துனரும், ராகவன் (கனடா), பந்துல (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2023) வியாழக்கிழமை பி.ப 4.00 மணிக்கு கல்கிஸ்ஸை (மஹிந்த) பாலரில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
0777 322 168

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 01 . 1952



மறைவு 12 . 09 . 2023

### திருமதி மகேஸ்வரி செல்வரத்தினம்

அரசடி கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி செல்வரத்தினம் கடந்த (12.09.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பையா தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும், சிவாசினி (ஜேர்மனி), கிருபாலினி (இலண்டன்), மாலினி (இலண்டன்), விமலன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாஸ்கரன் (ஜேர்மனி), தயாபரன் (இலண்டன்), கபிலன் (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிரூஜா, அருண்யா, அருணன், அனுசன், லக்சன், வினோசன், தனுஷிகா, சாருஜன், சுருதிகா, அஸ்வினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.09.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அரசடி ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு. 077 015 8577

தகவல்:
மகன் - விமலன்

(CS 26226) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 10 . 1956



மறைவு 13 . 09 . 2023

### அம்பலவாணர் விக்னராஜா

(முன்னாள் உத்தியோகத்தர் ஸ்ரீ லங்கா ரெலிகொம்)

வட்டு மேற்கு வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் கலைமகள் வீதி, கல்வியங்காட்டை வதிவிடமாகவும் கொண்ட அம்பலவாணர் விக்னராஜா (முன்னாள் உத்தியோகத்தர் ஸ்ரீ லங்கா ரெலிகொம்) அவர்கள் நேற்று (13.09.2023) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் செல்வரத்தினம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் கமலாம்பிகை தம்பதியரின் மருமகனும், சத்தியதேவியின் அன்புக் கணவரும், நிரோசன் (நீதிமன்ற உத்தியோகத்தர் குடியியல் மேன் முறையீட்டு மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்), நிஷுக்ஷிகா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்றவர்களான சண்முகராஜா, சிவசுப்பிரமணியம், மனோன்மணி, பூபாலராஜா மற்றும் தவமணி (சிங்கப்பூர்), கிருஷ்ணர் (கொழும்பு), சரஸ்வதி (கனடா) ஆகியோரின் சகோதரனும், விஜயகுமாரியின் பாசமிகு மாமனாரும், அகிஷான், அபினாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2023) வியாழக்கிழமை கல்வியங்காட்டில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.30 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P:021 222 6783

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 01 . 1951



மறைவு 13 . 09 . 2023

### திருமதி சிவஞானம் சத்தியபாமா

காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும் மானிப்பாய் மூத்ததம்பி வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானம் சத்தியபாமா நேற்று (13.09.2023) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு செல்லம்மா தம்பதியரின் ஏக புதல்வியும், காலஞ்சென்ற முத்தையா சிவஞானத்தின் அன்பு மனைவியும், விஜிதர் அவர்களின் அன்புத் தாயாரும், கனகநாயகம், அருமைநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அருமைநாயகம் இந்திராணி, கனகநாயகம் சரோஜினிதேவி ஆகியோரின் மைத்துனியும், அருமைநாயகம் சுஜிந்தரின் பாசமிகு அத்தையும், திருமதி டினோசா சுஜிந்தரின் பெரியம்மாவும், சு.ஆதிரனின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2023) வியாழக்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 555 1004, 077 811 0813

(CS 26205) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்ந்து....

கொக்குத்தொடுவாயில் மனித எலும்பு எச்சங்கள் இனங்காணப்பட்ட பகுதியில் தொடர்ச்சியாக அகழ்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த நாள்களிலும் மனித எலும்பு எச்சங்களும், தடயப்பொருள்களும் மீட்கப்பட்டிருந்தன.

நேற்று நடந்த அகழ்வுப் பணிகளில் 3 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டன. அத்துடன் விடுதலைப் புலிகள் பயன்படுத்திய சயனைட் குப்பி ஒன்றும், இரு இலக்கத்தகடுகளும் மீட்கப்பட்டுள்ளன.

இந்த அகழ்வுப் பணிகள் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி த.பிரதீபன் முன்னிலையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. முல்லைத்தீவு மாவட்ட சட்ட மருத்துவ அதிகாரி க.வாசுதேவா, தொல்லியல் ஆய்வாளர் பரமு புஷ்பரட்ணம், தடயவியல் பொலிஸார் ஆகியோரின் கண்காணிப்புடன் நடைபெறும் இந்த அகழ்வுப் பணிகள் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் மேற்கொள்ளப்படுகின்றது.

நேற்று ஏழாம் நாள் அகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட சட்ட மருத்துவ அதிகாரி க.வாசுதேவா, நீதிமன்றம் உத்தரவிட்டால் அடுத்தவாரமும் அகழ்வுகள் மேற்கொள்ளப்படும். அகழ்வுப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி அதற்கும் போதுமானது என்று தெரிவித்தார்.

அகழ்வுப் பணிகளுக்காக 5.7 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி கடந்த வாரமும், இந்தவாரமும் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அடுத்தவாரம் அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளவும் அதுபோதுமானது. நீதிமன்றம் உத்தரவிட்டால் அதற்கு அடுத்தவாரமும் அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்- என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-எ-19)

## பயங்கரவாத...

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் எதிர்வரும் சில தினங்களில் வர்த்தமானியில் வெளியிடப்படும் என வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட அளவுகோல்களின்படியும், நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையிலும், நாட்டு மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலும் சமநிலையான சட்டத்தைக் கொண்டுவரும் நோக்கத்துடன் தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இது தொடர்பில் நீதியமைச்சரின் தலைமையில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு, இந்த புதிய சட்டம் சாதகமான மட்டத்தில் திருத்தப்பட்டுள்ளது. நமது நாட்டில் சட்டங்களைத் திருத்தவும், புதிய சட்டங்களை உருவாக்கவும் ஒரு பொறிமுறை உள்ளது. அந்தப் முறைகளுக்கு ஏற்ப இந்தப் புதிய சட்டம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பிறகு, இந்தச் சட்டம் தொடர்பான புரிதலை நாட்டு மக்கள் அனைவரும் பெற முடியும்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டு, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்ற இந்தப் புதிய சட்டத்தை, இந்த வாரத்திலோ அல்லது அடுத்த வாரத்திலோ விரைவாக வர்த்தமானியில் வெளியிட எதிர்பார்க்கப்படுகிறது. அதன்பின்னர் முதலாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். நாட்டு மக்களுக்கு இந்தச் சட்டம் தொடர்பில் கருத்துவேறுபாடுகள் இருப்பின், ஒரு வாரத்துக்குள் அதை சவாலுக்கு உட்படுத்தி உயர் நீதிமன்றத்துக்குச் செல்லும் வாய்ப்பும் உள்ளது.

உயர்நீதிமன்றத்துக்கு தனியான, விசாரணை நீதிமன்ற அதிகாரம் உள்ளது. உயர்நீதிமன்றம் வழங்கக்கூடிய அறிவுறுத்தல்களின்படி, மேலும் திருத்தங்களை மேற்கொள்ள அரசு தயாராக உள்ளது. இந்தப் புதிய சட்டம் ஏற்கனவே உள்ள சட்டத்துடன் ஒப்பிடும்போது மிகவும் முற்போக்கான புதிய விடயங்களுடனேயே திருத்தப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முதன் முதலில் 1979ஆம் ஆண்டு ஆறு மாத காலத்துக்காகக் கொண்டு வரப்பட்டது. ஆனால் தொடர்ந்தும் நாட்டில் பயங்கரவாதச் செயற்பாடுகள் தீவிரமாக இடம்பெற்றதன் காரணமாக, இன்றுவரை பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நடைமுறையில் உள்ள ஒரு சட்டமாக இருக்கின்றது. 2009ஆம் ஆண்டு போர் நிறைவுக்கு வந்த பின்னர் இந்தச் சட்டம் தேவையா? எனப் பல்வேறு விமர்சனங்கள் இதுதொடர்பில் முன்வைக்கப்பட்டு வந்ததன் காரணமாக, 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் இந்தச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்பட்டன.

துரதிர்ஷ்டவசமாக 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக அந்த முயற்சிகள் தடைப்பட்டதுடன், மீண்டும் இந்த பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை வலுவாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கருத்துகள் மேலோங்கின.

கடந்த காலங்களில் இந்த விடயம் தொடர்பில் மீண்டும் கலந்துரையாடல்கள் நடைபெற்ற பின்னர், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தளர்த்துவதற்கான வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2021ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில், பொலிஸ் மா அதிபர், பயங்கரவாதச் செயல்களில் நேரடியாக ஈடுபட்டவர்களைத் தவிர வேறு யாரையும் இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யக்கூடாது என்று பொலிஸ் நிலையங்களுக்கு ஒரு சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தினார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களின் எண்ணிக்கை விகிதாசார அடிப்படையில் குறைந்துள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், தடுப்புக் காவலில் வைத்திருக்கும் காலத்துக்கு எந்த எல்லையும் இருக்கவும் இல்லை.

இந்தப் புதிய சட்டத்தின் மூலம் 60 நாள்கள் மாத்திரமே தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க முடியும். அவர்களை சட்ட பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட மையங்களில் மாத்திரமே தடுத்து வைக்கவும் முடியும். இந்தப் புதிய சட்டத்துக்கு ஏற்ப ஒருவரைக் கைது செய்த பிறகு, 48 மணி நேரத்துக்குள் நீதிபதியிடம் முற்படுத்தி இதுதொடர்பில் விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

ஒப்புதல் வாக்குமூலத்தின் (confession) அடிப்படையில் யார் மீதும் வழக்குத் தொடர முடியாது. அவ்வாறு வழக்குத் தொடர வேண்டுமெனில், அது பொதுவான சட்டத்தின்படி நீதிபதியின் முன் செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் படியே அமைய வேண்டும்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு தயாரிக்கப்பட்டதன் பின்னர், சட்டத்தரணிகள், சட்டத்தரணிகள் சங்கம், சர்வதேச சமூகம், சிவில் அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள் எனப் பல்வேறுபட்டவர்கள் முன்வைத்த கருத்துகள் தொடர்பாகவும் நாம் அவதானம் செலுத்தினோம். புதிய பரிந்துரைகளுடன் திருத்தப்பட்ட சட்டம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதற்கு அமைச்சரவை அங்கீகாரமும் கிடைத்துள்ளது என்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார். (அ-எ-44)

## எரிபொருள்...

ஆண்டு நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கை கனியவளக் கூட்டுத்தாபன விநியோகஸ்தர்கள் சங்கத்துடன் நடந்த கலந்துரையாடல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பில் எரிபொருள் விநியோகம் மற்றும் புதிய எரிபொருள் நிலையங்களின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பாகப் பேசப்பட்டுள்ளது.

எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை தானியங்கி கணினிமயப்படுத்தப்பட்ட முறைமைக்கு மாற்றுவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## அகற்றப்பட்ட....

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணைகளின் பின்னர் வழக்கு எதிர்வரும் 27ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, அதன் விசாரணை அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று கடந்த வழக்குத் தவணையின்போது நீதிமன்றம் கட்டளையிட்டிருந்தது.

விசாரணைகள் இன்னமும் முடிவடையாத நிலையில், விசாரணைகளுக்கு இன்னமும் 10 நாள்கள் தேவை என்று நேற்றைய வழக்கு விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம், சிறுமியின் துண்டிக்கப்பட்ட கையை கொழும்புக்கு அனுப்பி பரிசோதனைகளை மேற்கொள்ளவும், கை அகற்றப்பட்டமைக்கான காரணத்தைக் கண்டறியவும் நீதிமன்று உத்தரவிட்டது. சிறுமியின் கை பரிந்துரைக்கப்பட்ட மருத்துவமனையில் பொலிஸார் ஊடாகக் கையளிக்கப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைக் குழு அறிக்கையை முழுமைப்படுத்திச் சமர்ப்பிப்பதற்கு ஏதுவாக வழக்கு எதிர்வரும் 27ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டது. சிறுமியின் சார்பாக சட்டத்தரணிகளான சர்மினி விக்னேஸ்ரன் மற்றும் லக்சன் செல்வராஜா ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

### பின்னணி

காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சிறுமி ஒருவரின் இடதுகையின் மணிக்கட்டுக்கு கீழ் அகற்றப்பட்டது.

சிறுமியின் கை அகற்றப்பட்டமைக்கு விடுதியில் கடமையில் இருந்தவர்களின் அலட்சியமும், தவறுமே காரணம் என்று சிறுமியின் பெற்றோர் குற்றஞ்சாட்டுகின்றனர். சிறுமியின் கையில் பொருத்தப்பட்ட கனுலா தவறாக பொருத்தப்பட்டமையால் சிறுமியின் கையில் இரத்த ஓட்டம் தடைப்பட்டு கையைத் துண்டிக்க வேண்டி ஏற்பட்டது என்றும் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில், சிறுமியின் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பெற்றோரின் முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸாரால் அந்த விடுதியில் கடமையில் இருந்தவர்களிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டிருந்தன. அங்கு கடமையில் இருந்த தாதி ஒருவருக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று கடந்த வழக்குத் தவணையின்போது பயணத் தடை விதித்திருந்தது. (அ-எ-26)

## பணிகளை...

கொழும்பு, செப்.14

ரயில் இயந்திரச் சாரதிகளின் பணிப்புறக்கணிப்புத் தொடரும் நிலையில், பணிப்புறக்கணிப்பில் உள்ள ரயில்வே சாரதிகள் 84 பேரும் உடனடியாகப் பணிக்குத் திரும்ப வேண்டும் என்று ரயில்வே திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

அவர்கள் பணிகளுக்குத் திரும்பத் தவறினால், அவர்கள் தாமாகவே பதவிகளில் இருந்து விலகியவர்கள் என்று கருதப்பட்டு அவர்களுக்கு அதற்கான கடிதங்கள் அனுப்பப்படும் என்றும் ரயில்வே திணைக்களம் எச்சரித்துள்ளது. அதேவேளை, நாடளாவிய ரீதியில் உள்ள ரயில் நிலையங்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்க பொலிஸ்மா அதிபர் பணித்துள்ளார் என்று பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

தற்போது பொலிஸாருடன் இணைந்து இராணுவத்தினரும் ரயில் நிலையங்களுக்குப் பாதுகாப்பு வழங்குகின்றனர். 32 ரயில் நிலையங்களில் இராணுவத்தினர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தேவை ஏற்படின் ஏனைய ரயில் நிலையங்களிலும் இராணுவத்தினரை கடமையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத் தெரிவித்தார்.

5 ஆண்டுகளாகத் தாமதிக்கப்பட்டுள்ள பதவி உயர்வை விரைவுபடுத்தல் உட்படச் சில கோரிக்கைகளை முன்வைத்து ரயில் இயந்திரச் சாரதிகள் நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பித்துள்ள பணிப்புறக்கணிப்பால் சுமார் 150 ரயில் சேவைகள் இரத்தாகின.

நேற்றுக் காலை 80 அலுவலக ரயில் சேவைகளில் 40 ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன என்று ரயில்வே திணைக்களத்தின் பிரதிப் பொதுமுகாமையாளர் என்.ஜே.இந்திபொல தெரிவித்தார்.

ரயில் சேவைகள் இரத்தானதால் ஏற்பட்ட நெருக்கடியை அடுத்து ரயில் கூரை மீதிருந்து பயணித்த இருவர் நேற்றுமுன்தினம் தவறிவீழ்ந்து உயிரிழந்திருந்தனர்.

இதற்கிடையில் கொழும்பில் இருந்து பதுளை நோக்கிப் பயணித்த உடரட்ட மெனிக்கே ரயில் தடம்புரண்டது. அதனால் மலையத்துக்கான ரயில் சேவையில் தடங்கல்கள் ஏற்பட்டன. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லிபுர....

மாகின்றது.

இன்று வியாழக்கிழமை காலை 8.45 மணியளவில் கொடியேற்றம் நடைபெற்று, திருவிழா 16 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெண்ணெய்த் திருவிழாவும், 23ஆம் திகதி சனிக்கிழமை துகில் திருவிழாவும், 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பாம்புத் திருவிழாவும், 25ஆம் திகதி திங்கட்கிழமை கம்சன்போர் திருவிழாவும், 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வேட்டைத் திருவிழாவும், 27ஆம் திகதி புதன்கிழமை சப்பறத் திருவிழாவும் நடைபெறும்.

எதிர்வரும் 28ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழா நடைபெற்று, மறுநாள் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை சமுத்திரத் திருவிழாவும், 30ஆம் திகதி சனிக்கிழமை கேணித் தீர்த்தமும் நடைபெற்று மாலை கொடியிறக்கம் நடைபெறும். (அ-எ-100)

வரைவின்...

வின் பிரதியைக் கோரி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 17ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட இந்தச் சட்டவரைவில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு திருத்தங்களைக் கோரியிருந்தது.

திருத்தப்பட்ட சட்டவரைவின் பிரதி கிடைத்தவுடன், அது தொடர்பான மேலதிக அவதானிப்புக்கள், பரிந்துரைகளைச் சமர்ப்பிக்க எதிர்பார்க்கின்றோம் என்று அந்த ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (அ-எ-இ)

கோத்தாவுக்கு...

பிறிதொரு கட்சிக்கு ஆதரவு வழங்கவுள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியிருக்கும் நிலையில், சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்குள் இருந்து அவருக்கு எதிரான கருத்துக்கள் வெளிக்கிளம்ப ஆரம்பித்திருக்கின்றன.

மக்களின் கடும் எதிர்ப்பை அடுத்து ஜனாதிபதிப் பதவியில் இருந்து விலகிய கோத்தாபயராஜபக்ச அதன்பின்னர் கடும் மௌனத்தைக் கடைப்பிடித்து வருகின்றார். அரசியல் செயற்பாடுகளில் இருந்து ஒதுங்கியுள்ளார். கடந்த சில நாள்களாக அவரது அரசியல் மீள்பிரவேசம் தொடர்பான செய்திகள் ஊடகங்களில் வெளியாகியிருந்தன.

கோத்தாபய ராஜபக்சவின் சகா ஒருவர் வாங்கியுள்ள கட்சி ஒன்றின் ஊடாக அவர் மீண்டும் அரசியலில் பிரவேசிக்கலாம் என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்தநிலையில், ஜனாதிபதி பதவியைத் தக்க வைத்துக்கொள்ள முடியாது நாட்டைவிட்டு ஓடிய கோத்தாபய ராஜபக்ச மீண்டும் அரசியலுக்கு வருவார் என்று கூறப்படுவது நகைச்சுவை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் மூத்த உறுப்பினரும், அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஜனாதிபதி கோத்தாபய மீண்டும் அரசியலுக்கு வந்தாலும் அவரை ஜனாதிபதி வேட்பாளராக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன களமிறக்காது என்றும் அவர் கூறினார்.

கோத்தாபய ராஜபக்சவுக்கு 69 இலட்சம் வாக்குகள் கிடைத்தன. அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள வாக்குகளைப் பெற்றுக்கொடுப்பதில் நான் முன்னின்று செயற்பட்டேன். அவருக்கு வழங்க வேண்டிய உச்சபட்ச ஒத்துழைப்பை மொட்டுக் கட்சி வழங்கியது. பங்காளிக்கட்சிகளும் ஆதரவு வழங்கின.

ஜனாதிபதிப் பதவியைச் சரியாக செய்யாமல், நாட்டைவிட்டு ஓடியவர் மீண்டும் அரசியலுக்கு வருவார் எனக் கூறப்படுவது நகைச்சுவைத்தனமாகும். அவர் இந்த நிலைக்கு இறங்குவார் என நான் நம்பவில்லை.

நாட்டில் மக்கள் எழுச்சி ஏற்பட்டபோது மக்கள் தரப்பில் உயிரிழப்புகள் ஏற்படாத வகையில் அவர் நம்பகரமானமுறையில் வெளியேறினார். அதை மதிக்கின்றோம். அது நல்லது. அவ்வாறு சென்றுவிட்டு மீண்டும் அரசியலுக்குள் வந்து அவர் செல்லவுள்ள பயணம்தான் என்ன?

நாம் உச்ச பதவியை வழங்கினோம், முழு ஆதரவை பெற்றுக்கொடுத்தோம். 69 இலட்சம் பேர் வாக்களித்தனர். கோத்தாபய ராஜபக்ச வருவதற்கு முன்னரே மஹிந்த ராஜபக்ச தலைமையில் உள்ளூராட்சித் தேர்தலில் நாம் வெற்றி பெற்றோம். எனவே, கோத்தாபய தனித்து 69 இலட்சம் வாக்குகளைப் பெறவில்லை. கோத்தாபய ராஜபக்ச சிறந்த நிர்வாக அதிகாரி என்பதை ஏற்கின்றோம். ஆனால், ஜனாதிபதிப் பதவியை அவர் சரிவரச் செய்யவில்லை.

கோத்தாபய ராஜபக்சவுக்கு மொட்டுக் கட்சி மீண்டும் வேட்பாளர் வழங்கும் என நான் நம்பவில்லை. மொட்டுக் கட்சியில் அவர் கேட்பார் என்பது கனவு. வழங்கிய வாய்ப்பை அவர் பயன்படுத்தவில்லை. கோத்தாபய அரசியலுக்கு வருவார் எனக் கூறப்படுவது கட்டுக்கதையாகக்கூட இருக்கலாம் -என்றார். (அ-எ-44)

வாள்வெட்டு....

செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவு உபபொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான குழுவினர் சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர்.

கடந்த ஜனவரி மாதமளவில் நடந்த வாள் வெட்டுச் சம்பவத்தில் மயிலங்காட்டைச் சேர்ந்த இளைஞர் படுகாயமடைந்திருந்தார். மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் வாள் வெட்டு தாக்குதல் நடத்தி விட்டுத் தப்பிச் சென்றிருந்தனர். கொடுக்கல் வாங்கல் காரணமாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், இந்தச் சம்பவம் தொடர்பான சந்தேகநபர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)

யாழ்.சிறையில்...

சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். நேற்றுமுன்தினம் மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்ட அவர், அன்றைய தினமே உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது.

போதைப் பொருள் தொடர்பான குற்றச்சாட்டுத் தொடர்பாக சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திடீர் சுகவீனமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார் என்றும், ஆயினும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்றும் கூறப்படுகின்றது. உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உடலை புதைப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் நடைபெறுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-26)

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 05 . 1978



மறைவு 12 . 09 . 2023

### இராமச்சந்திரன் மயூரன்

**(Ram Hadware Stores, Pointpedro Road, Kodikamam)**

அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நல்லூர் மற்றும் கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராமச்சந்திரன் மயூரன் கடந்த (12.09.2023) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமச்சந்திரன் (மின் முகாரி) மற்றும் அன்னசோதி (ஓய்வுநிலை ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மகனும், தங்கம் அவர்களின் பேறாமகனும், தர்மகுலசிங்கம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும், கவிதாவின் அன்புக் கணவரும், ஜகன்யா, சங்கீத் ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜிதா (அவுஸ்திரேலியா), செந்தூரன் (இலண்டன்), ஆரூரன் (இலண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், விஜயமுகுந்தன் (அவுஸ்திரேலியா), கோபியா (இலண்டன்), கல்பனா, கயந்தன் (இலண்டன்), அஜந்தன் (இலண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலியின் பின் இன்று (14.09.2023) வியாழக்கிழமை பிற்பகல் இரண்டு (2.00) மணியளவில் குடமியன் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**T.P: 077 9116 147**

(CR 40568) A-1

## 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 08 . 11 . 1993



மறைவு 16 . 08 . 2023

கடந்த (16.08.2023) அன்று சிவபதமடைந்த எமது அன்புச் செல்வம்

### அமரர் துளசி அனுஷன்

(கணிதபாட ஆசிரியர், மன்/சென்சேவியர் பெண்கள் கல்லூரி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளையதினம் 15.09.2023 வெள்ளிக்கிழமை அதிகாலை 05.00 மணியளவில் குரும்பைகட்டி ஞானவைரவர் ஆலய வளாகத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம், துண்டுப்பிரசுரம், பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு : இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுவருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**காந்தியூர், புலோலி தென்மேற்கு, புலோலி.**

**குடும்பத்தினர்.**

(CR 40566) A-1



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org